**தேதி :** 07.07.2026 **SC.No. :** 551/2025 PW :**1** சஜீவ்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தனிஅறிக்கையை யார் கைப்பட எழுதினார்கள் என்றால் காவலர் வெங்கடேஷ் என்பவர் எழுதினார். இந்த விபரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, கூறியுள்ளேன். சம்பவம் நடந்தபோது காவல்நிலையத்தில் தனிநபர்கள் இருந்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் நான் சம்பவம் நடக்கும்போது அங்கு இல்லை. முதல்தகவல்அறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் நான் குறிப்பிடவில்லை. எதிரி மதுபோதையில் வாகனத்தை ஓட்டி வந்ததற்காகத் தான் அவருடைய வாகனத்தை காவல்நிலையத்தில் பிடித்து போட்டோம்.

காவல்நிலையத்தில் சீ.சீ.டீ.வி பதிவுகள் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லிய இடத்திலும் சீ.சீ.டீ.வி உள்ளது.

நான் சொன்ன நாளில், நேரத்தில் அ.சா.2 டமிருந்து தனிஅறிக்கை எதுவும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.08 13:17:08 +0530

**தேதி :** 07.07.2026 **SC.No. :** 551/2025 PW :2 வெங்கடேஷ்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரியை குடிவெறிச்சான்றிற்கு அனுப்பி வைத்தேனா? என்றால் இல்லை. எதிரியின் வாகனத்தை யார் முன்னிலையில் பிடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் உள்ள சீ.சீ.டீ.வி பதிவுகளை பார்த்தால் சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் காவல்நிலையத்தில் என்னையும் சேர்த்து 3 போலீசார் இருந்தோம். எதிரி நடந்து தான் வந்தார். காவல்நிலையத்தில் சம்பவ நேரத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை. சீ.சீ.டீ.வி சம்பவ நாள் இயக்கத்தில் தான் இருந்தது. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் சீ.சீ.டீ.வி பதிவுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.08 13:17:16 +0530